மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
ஸ்ரீரங்கம்
OS.No.302/2019

04.02.2026

பெயர்.திரு. சேகர் த/பெ. பெரியண்ணன் (வயது 46 /2026)

குறுக்கு விசாரணை–

1. இந்த வழக்கின் 1வது வாதி முத்தம்மாள் எனக்கு சின்னம்மா என்றால் சரிதான். என்னுடைய வழக்கில் நிரூபண வாக்குமூலம் அனைத்திலும் எனது தாயார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . நான் நீதிமன்றத்தில் தவறான தகவலை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. காஞ்சியாயின் தங்கச்சி மருமகள்தான் இந்த பிரதிவாதி லெட்சுமி என்றால் சரிதான் . 1ம் வாதி முத்தம்மாள் காஞ்சியாயி சின்னம்மாள் மகள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர்தான் காஞ்சியாயி என்றால் சரிதான் . காஞ்சியாயி பிரதிவாதி லெட்சுமிக்கும் அவரது கணவர் கணேசன் உயில் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2.காஞ்சியாயி கணவர் பெயர் ஜெயராமன் என்றால் சரிதான் . காஞ்சியாயிக்கும் குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான் . ஜெயராமன் வீட்டைவிட்டு போய் பலவருடங்கள் ஆகிவிட்டன என்றால் சரிதான். வழக்கில் சொல்லப்பட்டுள்ள தாவா சொத்து ஸ்ரீரங்கம் ஹரிசன கூட்டுறவு வீட்டுமனை சங்கத்தின் கடந்த 22.01.1982ம் தேதி பதிவு ஆவணம் எண் .100/1982ன்படி கிடைக்கப்பட்டது என்றால் சரிதான் . அந்த சொத்தை காஞ்சியாயி அவர்கள் பதிவு பெற்ற ஆவணமாக ஒரு அடமானம் வைத்திருந்தார் என்றால் சரிதான் . **அந்த ஆவணம் பி .வா.சா.ஆ.1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் பி .வா.சா.ஆ.1ல் காஞ்சியாயி என்பவரின் கையொப்பம் காஞ்சியாயி என்றுதான் உள்ளது என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்ததாக சொல்லப்படும் வா .சா.ஆ.1ல் காச்சியாயி என்று உள்ளது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.1 ஆவணம் எழுதி கொடுத்தவரின் பெயர் அதில் காஞ்சாயி என்றுதான் உள்ளது என்றால் சரிதான். இந்த அசல் வழக்க தாக்கல் செய்த வருடம் 2014 என்றால் சரிதான் . இந்த வழக்கு தாக்கல் செய்தபோது என்னுடைய வயது 35 என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . வா.சா.ஆ.1 அந்த ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் 2003ல் காலத்தில்

என்னுடைய வயது 35 என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . இந்த ஆவணம் 2014 ல் எழுதப்பட்டால்தான் என்னுடைய வயது 35 என குறிப்பிடமுடியும் என்றால் எழுதும்போது எனது வயது கம்மிதான்.

4. வா.சா..ஆ.1 ஆவணம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை நானாக இந்த ஆவணத்தை தயார் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல . என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் காஞ்சியாயி என்பவருக்க society ல் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான் . **அந்த ஆவணம் பி .வா.சா.ஆ.2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** வா.சா.ஆ. 5 கல்யாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் மேற்படி காஞ்சியாயிதான் எங்கள் இருவருக்கும் திருமணம் செய்துவைத்துள்ளார் என்று எனது பிராதில் சொல்லலவில்லை என்றால் சரிதான் .. வா.சா.ஆ.5 வழக்கிற்கு பின்னிட்டு என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல . அது உண்மையான ஆவணம். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள அனைத்து அனைத்து வருவாய் ஆவணங்களும் காஞ்சியாயி பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான் . வழக்கிற்கு பின்னிட்டு வழக்கு சொத்து பொறுத்து எனது பெயரில் எந்தவொரு ஆவணமும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவி'லை என்றால் சரிதான் . எல்லா ஆவணமும் பிரதிவாதி பெயரில் உள்ளது அதனால்தான் வழக்கு சொத்தின் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ–1 ல் 5 வயதில் இருந்தே காஞ்சியாயி அவர்களுகூடன் இருந்து வருகிறேன் என்று குறிப்பு உள்ளது என்றால் உள்ளது. கதவு எண்.52/53 இருந்து வருகிறேன்.

5. நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ.7 என்னுடைய வாக்காளர் அடையாள அட்டை அதில் நெ.11 வார்டு 1 நைட்சாயில் டெட்போ ரோடு திருச்சி என்றுதான் எனது முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது என்னுடைய கதவு எண்.52/53 ன் பழைய முகவரி ஆகும் . வா.சா.ஆ.1 ஆவணம் 2003 ல் ஏற்பட்டது அதில் கதவு எண்.52/53 முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அதற்கு பின் 2006 ல் ஏற்படுத்தப்பட்ட வாக்காளர் அடையாள அட்டையில் நைட்சாயில் டேப்போ ரோடு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வாக்களார் அடையாள அட்டையில் புது முகவரி, பழைய முகவரி என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான் . நெ.11 வார்டு 1 நைட்சாயில் டெட்போ ரோடு திருச்சி கதவு எண் .52/53 முகவரிதான் என்று குறிப்பிட்டு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . இந்த இரண்டு முகவரிகளும் வெவ்வேறு முகவரிகள் ஒரே முகவரி என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் 5 வயதில் இருந்து காஞ்சியாயியுடன் வளர்ந்து வருகிறேன் என்று சொல்லும பட்சத்தில் நான் தாக்கல் செய்துள்ள வா .சா.ஆ.6 ரேஷன் கார்டில்

காஞ்சியாயி பெயர் குறிப்பிடபடவில்லை எனது பெற்றோர் பெயர்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான் . நான் காஞ்சியாயின் சின்னம்மா மகன் என்பதற்காக பிரதிவாதிதான் அவருக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை குடியிருப்பதற்காக எங்களுக்கு வாடகைக்கு கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல . நாங்கள் உறவுக்காரர் என்பதால் வாடகை தருவதில்லை என்றால் சரியல்ல . உயில் அடிப்படையில் அவர்களுக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதனால் எங்களை காலி செய்ய சொன்னபோது தற்கொலை செய்துக்கொள்வதாக அவர்களை மிரட்டியதால் கடந்த 09.08.2014 ம்த தேதி ஸ்ரீரங்கம் காவல நிலையத்தில் பிரதிவாதி புகார் அளித்திருந்தார் என்றால் புகார் அளித்திருந்தார். அந்த புகார் அடிப்படையில் மேற்படி சொத்தை ஒரு மாதகாலத்திற்குள் காலி செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் இல்லை. காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேன் என்றால் சரிதான். அந்த விசாரணையில் என்ன எழுதிக்கொடுத்தேன் என்றால் சொத்தை காலி செய்ய மாட்டேன் என்று எழுதிக்கொடுத்தேன். அவ்வாறு எழுதிக்கொடுத்த பிறகுதான் மோசடியாக இந்த வா.சா.ஆ.1 யை தயாரித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் மோசடியாக ஆவணம் தயார் செய்தேன் என்று பிரதிவாதி மாநகர குற்றப்பிரிவில் புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான் . அந்த புகாரில் என்னையும் அதில் சாட்சி கையொப்பம் செய்தவர்களையும் விசாரணைக்கு வரச்சொன்னார்கள் என்றால் சரிதான் . வா.சா.ஆ.1 ல் சாட்சியாக கையொப்பம் செய்த முதல் சாட்சி அய்யாவு எனது உறவினர் என்றால் தூரத்து உறவினர் . மேற்படி புகாரிம்ன பேரில் என்னையும் எனது மனைவி , அய்யாவு, அய்யனார் ஆகியோர்களை விசாரணைக்கு கடந்த 01.05.2017, 08.05.2017 21.06.2017 ஆகிய தேதிகளில் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அய்யனாரை வரசொல்லவில்லை. அய்யனார் இறந்துவிட்டார். இந்த விசாரணைக்கு பின்னிட்டு காவலர்கள் தொல்லை செய்யக்கூடாது என உத்தரவுக்கோரி உரிமையியல் நீதிமன்றத் திருச்சியில் அசல் வழக்கு எண் .52/2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . அதில் இந்த பிரதிவாதியை தரப்பினராக சேர்த்திருந்தேன் என்றால் சரிதான் . இந்த பிரதிவாதி அந்த வழக்கில் எதிருரை தாக்கல் செய்ததை பின்னிட்டு சாட்சியத்தின்போது மேற்படி வழக்கை நடத்தமால் விட்டுவிட்டேன் என்றால் சரிதான்.

8. வழக்கு சொத்து யாரும் குடியிருக்க தகுதியற்றமுறையில் உள்ளது என்றால் நான் குடியிருந்து வருகிறேன் . அந்த கட்டிடம் சேதமடைந்ததால் அதை கட்டுமானம் செய்வதற்காக பிரதிவாதி நடவடிக்கை எடுக்கும்போது நானும் குடியிருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல . நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காஞ்சியாயி இறப்பு சான்றிதல் நகல் வா.சா.ஆ.2 தாக்கல் செய்துள்ளேன் அதன் அசல் பிரதிவாதி வசம்தான் உள்ளது அதில் பிரதிவாதிதான் மாநகராட்சிக்கு தகவல் சொல்லி

பெற்றுள்ளார் என்றால் சரியல்ல நாங்கள் அசலைதான் தாக்கல் செய்துள்ளேன் . மாநகராட்சிக்கு மனு செய்து பிரதிவாதிதான் இறப்பு பற்றிய தகவல் சொல்லி இறப்பு சான்றிதழ் பெற்றார் என்றால் சரியல்ல. நான் எதுவும் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . அதன் ரசீதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாநகராட்சியின் படிவத்தை எடுத்து பார்த்தால் யார் மனு தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான் . நான் எந்தவிதமனுவும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. இறந்த காஞ்சியாயிக்கு ஈமகாரியம் , கணேசன்தான் செய்தார் என்றால் சரியல்ல. நான்தான் செய்தேன் . நான்தான் ஈமகாரியம் செய்தேன் என்று எனது பிராதிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான் . காஞ்சியாயிக்கு கணேசன்தான் ஈமகாரியம் செய்தார் என்பது ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்றாலும் , நான்தான் ஈமகாரியம் செய்தேன் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . இந்தசொத்தை காஞ்சியாயி அவர்கள் ஒரு பதிவு பெற்ற உயில் மூலும் 27.01.2012 தேதியன்று ஒரு பதிவு பெற்ற உயில் மூலமாக பிரதிவாதிக்கும் பிரதிவாதியின் கணவருக்கும் எழுதி வைத்து மேற்படி ஆவணம் ஸ்ரீரங்கம்ம சார்பதிவகத்தில் ஆவண எண் . 14/2012 பதிவாகியுள்ளது என்ற விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் இந்த வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல . மேற்படி பதிவு பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் காஞ்சியாயி இறந்த பிறகு உயில் அமுலுக்கு வந்து பிரதிவாதியும் , அவரது கணவர் கணேசன் என்பவருக்கும் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்தது வந்தது என்று நன்கு தெரியும் என்றால் தெரியாது.

10. காஞ்சியாயி அவர்கள் 24.07.1996 ம் தேதியில் பாலக்கரை இரட்டை பிள்ளையார் கோவில் வசிக்கும் S.K.ராஜா நாடார் அவர்களுக்கு ஒரு பதிவு பெற்ற ஈட்டுகடன் எழுதிக்கொடுத்து மேற்படி ஆவணம் 3392/1996 ஆக பதிவாகியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது . அடமானத்தை உயிலுக்கு பின்னிட்டு கடந்த 08.08.2014 ம் தேதி பிரதிவாதிதான் செல்லுவைத்து அடமானத்தை மீட்டு பதிவு செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த சொத்தை காஞ்சியாயி அடமானம் வைத்த விவரம் எனக்கு தெரியும் அதை பிரதிவாதிதான் மீட்டார் என்ற

**விவரம் எனக்கு தெரியும் அதை மறைத்து தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

**Sd/-xxxxx**

Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made is his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam